## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)-2013-14-ஆம் ஆண்டு சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின் கீழ் தாட்கோ திட்டங்கள் செயல்படுத்துவதற்கான செயல்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வழிகாட்டி நெறிமுறைகள் செயல்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉ.தி.2)துறை

**அரசாணை (நிலை) எண்.45** **நாள் : 09.07.2013**

**திருவள்ளுவர் ஆண்டு, 2044 ஆனி 25.**

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.97, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉ.தி) துறை, நாள் 28.10.2011
2. அரசாணை (நிலை) எண்.114, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉ.தி) துறை, நாள் 15.11.2011
3. மேலாண்மை இயக்குநர் தாட்கோ அவர்களின் கடித எண்.ஜி1/3253/2013, நாள் 28.5.2013

******

**ஆணை:-**

மேலே ஒன்றில் காணும் அரசாணையில் 2011–2012–ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை சிறப்பு மத்திய நிதியுதவி திட்டத்தின் கீழ் தாட்கோ மூலம் செயல்படுத்துவதற்கான செயல்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டில் காணும் அரசாணையில் 2011–2012–ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கான மாநில செயல்திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. ஆதிதிராவிடர்களுக்கான சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்துவது தொடர்பான விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும், மத்திய அரசு வழங்கும் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின்படி ஒவ்வொரு உட்பிரிவிற்கும் பல்வேறு காலக் கட்டங்களில் தனித்தனியாக வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு வழங்கும் சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் 90 விழுக்காடு தொகை ஆதிதிராவிடர்களுக்கான சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவதற்காக தாட்கோ நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது என்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ தனது கருத்துருவில் தெரிவித்துள்ளார்.

4. ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்துவதற்காக, 2013–14–ஆம் ஆண்டிற்கான, மாநில செயல்திட்டம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் 28.05.2013 அன்று நடைபெற்ற தாட்கோ இயக்குநர் குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கருத்துரு ரூ.352.96 கோடியில் (ரூ.125.91 கோடி மானியம் + ரூ.227.05 கோடி பருவக் கடன்) 36126 நபர்கள் பயனடையும் வகையில் கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டு, மேலே பார்வை 3–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தாட்கோவின் மேலாண்மை இயக்குநர் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:–

## <u>செயல் திட்டம் 2013 – 14</u>

| வ. எண் | திட்டம் | | இலக்கு | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணம் | மானியம் | கடன் | மொத்தம் |
| | | | | ரூபாய் இலட்சத்தில் | | |
| 1 | நிலம் வாங்கும் திட்டம் | 50 | 150 | 337.50 | 787.50 | 1125.00 |
| 2 | நிலம் மேம்பாட்டு திட்டம் | 100 | | | | |
| 3 | தொழில் முனைவோர் திட்டம் | | | | | |
| அ | பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைத்தல்: | | 20 | 45.00 | 105.00 | 150.00 |
| ஆ | தொழில் முனைவோர் திட்டங்கள் | | 2000 | 4500.00 | 10500.00 | 15000.00 |
| 4 அ | இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் | | 1500 | 3375.00 | 7875.00 | 11250.00 |
| ஆ | மருத்துவமனை, மருந்துக்கடை, கண்கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்தப் பரிசோதனை நிலையம் அமைத்தல், | | 150 | 337.50 | 787.50 | 1125.00 |
| 5 | சுய உதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி | 700 குழு | 8400 | 1467.00 | 1467.00 | 2934.00 |
| 6 | சுய உதவி குழுக்களுக்கான சுழல் நிதி | 600 குழு | 7200 | 150.00 | 300.00 | 450.00 |
| 7 | மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி | | 250 | 50.00 | 0.00 | 50.00 |
| 8 | மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி – பயிற்சி/ உதவி | | 250 | 100.00 | 0.00 | 100.00 |
| 9 | துரித மின் இணைப்பு | | 2000 | 200.00 | 0.00 | 200.00 |
| 10 | இந்திய குடிமை பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி | | 50 | 25.00 | 0.00 | 25.00 |
| 11 | சட்டப்பட்டதாரிகளுக்கு நிதியுதவி | | 600 | 300.00 | 0.00 | 300.00 |
| 12 | தமிழ்நாடு தேர்வாணைய தொகுதி-1 முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி | | 50 | 25.00 | 0.00 | 25.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | பட்டயக்கணக்கர்/ செலவுக் கணக்கர்களுக்கு நிதியுதவி | | 100 | 50.00 | 0.00 | 50.00 |
| 14 | தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி* | | 8406 | 377.00 | 883.00** | 1260.00 |
| 15 | திட்ட மதிப்பாய்வு செய்வதற்கு நிதியுதவி | | 0 | 2.00 | 0.00 | 2.00 |
| 16 | திறன் மேம்பாட்டு பயிற்சி | | 5000 | 1250.00 | 0.00 | 1250.00 |
| மொத்தம் | | | 36126 | 12591.00 | 22705.00 | 35296.00 |

** விளிம்புக்கடன்

5. ரூ.125.91 கோடி சிறப்பு மத்திய நிதியுதவியுடன் 2013–2014–ஆம் ஆண்டிற்கான பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.352.96 கோடியில் தாட்கோ மூலம் செயல்படுத்துவது தொடர்பாக கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் அளித்து ஆணை வழங்குமாறு மேலாண்மை இயக்குநர், தாட்கோ அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மத்திய சிறப்பு நிதியுதவி திட்டம் 2013–2014– ஆம் ஆண்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

ஒவ்வொரு ஆண்டும் திட்டம் செயல்படுத்தும் பொழுது திட்டத்திற்கான உச்சவரம்பு மட்டுமே நிர்ணயிக்கப்படுகிறது. இதனால் சில முன்னுரிமை இல்லாத, வருவாயை உறுதி செய்ய இயலாத சமூக மாற்றத்தை ஏற்படுத்தாத மற்றும் குறைந்த அலகுத்தொகை கொண்ட கடன் திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் பயனாளிகளின் வருமானத்தில் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லை. மேலும் எதிர்பார்த்த அளவில் சமூக பொருளாதார மாற்றங்களும் ஏற்படவில்லை. எனவே சரியான வருவாயை உறுதி செய்யக்கூடிய வகையில் திட்டங்களை தேர்வு செய்யவும், அவற்றிற்கான குறைந்தபட்ச மதிப்பீட்டினை நிர்ணயம் செய்யவும் கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் .

(i) ஒவ்வொரு பயனாளியையும் தேர்வு செய்யும்போது திட்ட அறிக்கையினை பகுப்பாய்வு செய்து நல்ல திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(ii) தேர்வு செய்யப்படும் திட்டம் சொத்தினை உருவாக்கக் கூடியதாகவும் தொடர்ந்து பயனாளிகளுக்கு போதிய வருமானத்தினை வழங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

(iii) தேர்வு செய்யப்படும் திட்டம் குறைந்தபட்சமாக ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் முழுமையான திட்ட அறிக்கையுடன் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அதிக பட்சமாக தாட்கோ மானியம் வழங்குவதற்கு திட்டத் தொகையின் உச்ச வரம்பு ரூ.7.50 இலட்சம் வரை நிர்ணயிக்கப்படுகிறது.

(iv) தமிழக அரசு 2013–14–ம் நிதியாண்டில் தோட்டக்கலை, உணவு பதப்படுத்துதல், நுண்ணீர் பாசனம், கால் நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை, ஆழ்கடல் மீன் பிடித்தல் போன்ற துறைகளில் அதிக முக்கியத்துவம் அளிக்க உள்ளதால் இதைச்சார்ந்த தொழில்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கலாம்.

(v) மேலும் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் பொருட்டு இலவசமாக ஆடுகள் மற்றும் பால்மாடுகள் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக செயல்படுத்தி வருவதால் ஆடுகள் மற்றும் பால்மாடுகள் கோரி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை அவர்களுக்கு அந்தந்த தாட்கோ மாவட்ட மேலாளர்கள் பரிந்துரை செய்யவேண்டும். மேலும் அதிக மேய்ச்சல் தரைகளும் நீர்வளமும் உள்ள மாவட்டங்களில் பால்பண்ணை தொழில் அனுமதிக்கலாம். ஆனால் ஆவின் அல்லது தனியார் பால் கூட்டுறவுச் சங்கங்களோடு ஒப்பந்தம் செய்யும் நிலையினை கட்டாயமாக்கி பின் நிதியுதவி வழங்கப்படும்.

(vi) பெட்டிக்கடை (ம) மளிகை கடை வைத்தல், வாகனங்களில் சென்று துணி வியாபாரம் செய்தல், வாடகை பாத்திரக்கடை வைத்தல், சைக்கிள் கடை, கை / தள்ளு வண்டி மூலம் காய்கறி, பழங்கள் விற்பனை செய்தல், வாடகை நாற்காலி கடை நடத்துதல், மைக்செட், கரிமூட்டம் அமைத்தல் (அதிகளவில் இத்தொழில் நடைபெறும் மாவட்டம் தவிர), மற்றும் தென்னை (ம) பனை ஓலை முடைதல் போன்ற தொடர் வருவாய் ஈட்டுதலை உறுதி செய்ய இயலாத எதிர்பார்ப்பிற்கேற்றார் போல் சமூக மாற்றங்களை ஏற்படுத்தாத திட்டங்களை தேர்வு செய்வதை அறவே தவிர்த்தல் வேண்டும்.

(vii) வங்கியாளர்களால் திட்ட அறிக்கையில் உள்ளபடி முழுக் கடனையும் வழங்காமல் மானியத் தொகையினை மட்டுமே கடனாக வழங்குதல் மற்றும் சொத்து உருவாக்கத்தின் போது வங்கியிலிருந்து நேரடியாக பயனாளிகள் பெயரில் காசோலை வழங்குதல் போன்ற நடைமுறைகளைத் தவிர்க்க வேண்டும்.

## 2. <u>திட்ட வரையறைகள்</u>

திட்டங்களை பொறுத்தவரை கீழ்கண்ட <u>பொருள் வரையறை</u> (Definition) அளிக்கப்படுகிறது:-

**அ) <u>குடும்பம்</u>**

- குடும்பம் என்பது விண்ணப்பத்தாரரின் தாய், தந்தை, திருமணமாகாத மகள் மற்றும் மகன்.
- திருமணமான மகன், மகள் தனிக் குடும்பமாக கருதப்படுவர்.
- நில உடைமைத் திட்டத்தின் கீழ் குடும்பத்தின் மொத்த உடைமை (total holding) என்பதை முடிவு செய்யும்பொழுது மட்டும் திருமணமான மக்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவராகக் கருதப்படுவர்.

**<u>விளக்கம்:-</u>**

இத்திட்டத்தில் ஒரு குடும்பத்தின் உடைமை, வாங்கும் நிலத்தையும் சேர்த்து புன்செய் நிலமாக இருப்பின் 5 ஏக்கரும், நன்செய் நிலமாக இருப்பின் 2 1/2 ஏக்கரும் கணக்கிடப்படும். மேலும் மக்கள் அனைவரும் என்பதால் பெற்றோர்/ மூதாதையர் பாத்தியதை மூலம் பெறப்படும் சொத்தும் சேர்த்து கணக்கிடப்படும்.

## ஆ) ஆண்டு வருமானம்

- தாட்கோ திட்டங்களில் பயனடைய குடும்ப ஆண்டு வருமானச் சான்றிதழ் வருவாய்த்துறையினரால் வழங்கப்பட்டிருக்க வேண்டும். பொருளாதார திட்டங்களில் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

- குழு திட்டங்களுக்கு குழு ஊக்குனரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சம் வரை இருக்கலாம். குழு உறுப்பினர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சம் வரை இருக்கலாம்

- பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைக்க மற்றும் மருத்துவமனை அமைத்தல் திட்டங்களுக்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

- விண்ணப்பதாரர்களின் குடும்ப உறுப்பினர்கள் அரசு ஒய்வு ஊதியம் பெறுபவர்களாக இருப்பின் இத்தொகை குடும்ப வருமானத்தில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

## இ) மான்யம் :–

சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக கடன் சுமையைக் குறைப்பதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்த ஊக்குவிக்கும் முகமாக, சிறப்பு உதவியாக திட்டத் தொகையில் கடன் தொகையை ஈடுகட்டும் வகையில் திருப்பிச் செலுத்த அவசியமில்லாத நிதியுதவி.

- தனி நபர் திட்டங்களுக்கு திட்டத் தொகையில் 30 சதவீதம் அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் தாட்கோ மூலம் மான்யமாக விடுவிக்கப்படும்.

- வங்கிக் கடனுடன் செயல் படுத்தப்படும் திட்டங்களுக்கு தாட்கோ பின் விடுவிப்பு மானியமாக ( Backended subsidy) வழங்கப்படும் .

- குழு சுழல் நிதிக்கு ரூ.25,000/–மும், மற்றும் குழு பொருளாதார நிதியுதவி திட்டத்தின் கீழ் திட்டத்தொகையில் 50 சதவீதம் அல்லது ரூ.2.50 இலட்சம் இவற்றில் குறைந்த தொகை மான்யமாக விடுவிக்கப்படும்.

- மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை திட்டத்தில் குடும்பத்திற்கு அதிகபட்சமாக ரூ.20,000/– மான்யமாக வழங்கப்படும்.

- மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி ரூ.20,000/–. வேறு எந்தவித திட்டத்தின் கீழும் உடனடி நிவாரணம் இல்லா நிலையில் தேவையின் அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் வரை அனுமதிக்கலாம்.

- துரித மின் இணைப்பு திட்டத்தின் கீழ் மான்யம் ரூ.10,000/– வீதம் மின்சார வாரியத்திற்கு விடுவிக்கப்படும்.

- குடிமைப்பணி முதன்மை தேர்வு, தமிழ்நாடு தேர்வாணைய தொகுதி-1 முதன்மைத் தேர்வு, சட்டப்பட்டதாரிகளுக்கு நிதியுதவி, பட்டயக்கணக்கர் / செலவுக் கணக்கர்களுக்கு நிதியுதவி திட்டத்தின் கீழ் தலா ரூ. 50,000/– வீதம் மான்யம் வழங்கப்படும்.

ஈ) **<u>கடன் தொகை</u>** –

திட்டத்தொகையில் மான்யம் மற்றும் பயனாளி பங்குத் தொகை தவிர மீதமுள்ள தொகை கடனாகும். தாட்கோ விடுவிக்கும் மானியத் தொகைக்கு மட்டும் திட்டத்தொகை உச்ச வரம்பு ரூ.7.50 இலட்சமாகும்.

உ) **<u>நிதி விடுவிக்கும் முறை</u>** –

பொருளாதார திட்டங்களுக்கு தேர்வு குழுவினால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வங்கிக் கடன் கோரி வங்கிக்கு பரிந்துரைக்கப்படும். வங்கியிடமிருந்து விண்ணப்பதாரருக்கு வங்கிக் கடன் அளிப்பது குறித்து இசைவு தெரிவித்து படிவம் – 3 பெறப்பட்டவுடன் மான்யத் தொகை மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணைப்படி நேரிடையாக வங்கிக்கு அனுப்பப்படும்.

ஊ) **<u>ஆய்வு</u>** –

நிலம் வாங்கும் / நிலம் மேம்பாட்டு திட்டம், துரித மின் இணைப்பு திட்டம் ஆகியவற்றிற்கு மான்யம் விடுவிப்பதற்கு முன் மாவட்ட மேலாளர் தல ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

எ) **<u>சொத்து உருவாக்கல்</u>** –

திட்டங்களுக்கு மான்யம் மற்றும் வங்கிக்கடன் உதவி வழங்கப்பட்ட 30 நாட்களுக்குள் சொத்து உருவாக்குதலை மாவட்ட மேலாளர் தல ஆய்வு செய்ய வேண்டும். சொத்து உருவாக்கப்பட்ட பின் அதன் விவரத்தை புகைப்படத்துடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

## 3. <u>மாவட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு</u> :–

சிறப்பு மத்திய நிதியுதவி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் தாட்கோ பொருளாதாரத் திட்டங்களுக்கான மாவட்ட வாரியான ஒதுக்கீடு அந்தந்த மாவட்டங்களின் ஆதிதிராவிட மக்கள் தொகை விகிதாச்சாரத்தின்படி மேற்கொள்ளப்படும். மேலும், பொருளாதார திட்டத்திற்கான தொழில்களை (Trade) தேர்வு செய்யும் அதிகாரம் மேலாண்மை இயக்குநருக்கு வழங்கப்படுகிறது. மாவட்டவாரியான திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் உள்ஒதுக்கீட்டில் இலக்கினை அடையவில்லையெனில், மாவட்ட ஒதுக்கீட்டிற்கு மிகாமல் அந்தந்த மாவட்டங்களில் உள்ள வேறு தொழில்களுக்கு மேலாண்மை இயக்குநரே ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.

## 4. <u>இணையதளத்தில் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முறை</u> : –

2012–13ம் நிதியாண்டிலிருந்து தாட்கோவின் அனைத்து பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்படுகிறது. இந்த ஆண்டும் தாட்கோ இணையதள முகவரி http://application.tahdco.com மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தினை படியிறக்கம் செய்தோ / நகலினையோ, கைப்பிரதி விண்ணப்பங்களையோ சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

**விண்ணப்பிக்கும் போது,**

1. விண்ணப்பதாரர் பற்றிய விவரங்கள்.
2. புகைப்படம்.
3. இருப்பிடச் சான்றிதழ் எண்
4. சாதி சான்றிதழ் எண். (எண், வழங்கப்பட்ட நாள், வழங்கியவர் மற்றும் வழங்கப்பட்ட அலுவலகம்)
5. குடும்ப வருமான சான்றிதழ் எண். (எண்., வழங்கப்பட்ட நாள், வழங்கப்படுவதற்கான காரணம்)
6. பட்டா / சிட்டா - (நிலம் சம்மந்தப்பட்ட திட்டத்திற்கு)
7. குடும்ப அட்டை எண்.
8. திட்டங்களின் விவரங்கள்

முதலியவற்றை இணையதளத்தில் கண்டிப்பாக பதிவு செய்யவேண்டும். ஒன்று முதல் ஏழு வரை உள்ள விவரங்கள் இன்றியமையாதவை. இவற்றில் தவறான விவரங்கள் பதியப்படும் நிலையில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தவிர திட்டங்களுக்கு ஏற்றாற்போல் தேவைப்படும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

மனுதாரர்கள் தங்கள் பகுதியில் உள்ள இணையதள மையங்களில் விண்ணப்பங்கள் பெறுவதற்கு அறிவிக்கப்பட்ட நாட்களில் 24 மணி நேரமும் பதிவு செய்யலாம். மேலும் நடப்பாண்டிலிருந்து விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட மேலாளர் அலுவலகத்திலேயே அலுவலக நேரத்தில் மட்டும் பதிவு செய்யலாம். இதற்காக மனு ஒன்றிற்கு ரூ.20/– வசூல் செய்யலாம். இத்தொகையில் விண்ணப்பங்களை பதிவு செய்வதற்காக பணி அமர்த்தப்படும் தாட்கோ மூலம் பயிற்சி பெற்ற கணினி இயக்குபவருக்கு ரூ.10/–ம், மீதமுள்ள தொகை புகைப்படம் மற்றும் இதர ஆவணங்களை ஸ்கேன் (scan) செய்து பதிவேற்றம் செய்வதற்கான செலவினத்திற்காகவும் ஒதுக்கலாம். இத்தொகைக்கான கணக்கு மாவட்ட அலுவலகத்தில் தனியாக பராமரிக்கப்பட வேண்டும்.

## I <u>பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்</u>

## 1. <u>நிலம் வாங்கும் திட்டம்</u>

<u>நோக்கம்</u> :–

ஆதிதிராவிட மக்களின் நில உடைமையை அதிகரிக்கும் பொருட்டும், ஆதிதிராவிட மகளிரின் சமூக அந்தஸ்தை உயர்த்தும் பொருட்டும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

<u>தகுதி</u> :–

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தை சேர்ந்த மகளிராக இருக்க வேண்டும்.
- 18–55 வயதிற்குள்ளாக இருக்கவேண்டும்.

- விண்ணப்பதாரர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்கவேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

<u>**நிபந்தனைகள்:–**</u>

இத்திட்டத்தின் கீழ் நிலம் வாங்கும் போது கீழ்க்கண்ட நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்:-

- வாங்க உத்தேசித்துள்ள நிலத்தை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
- நிலம் விற்பனை செய்பவர் ஆதிதிராவிடர் அல்லாத இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் நிலமற்றவர்கள் அதிகபட்சமாக 2.5 ஏக்கர் நஞ்சை நிலமும் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலமும் வாங்கலாம்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள நிலம் மற்றும் வாங்க உத்தேசித்துள்ள / உறுதி செய்துள்ள நிலம் உள்பட 2.5 ஏக்கர் நஞ்சை அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலத்திற்குள் இருக்கலாம்.
- சார்பதிவாளரிடமிருந்து நிலத்தின் மதிப்பிற்கான வழிகாட்டி மதிப்பு பெறப்பட வேண்டும்.
- நிலத்தின் மதிப்பு அரசின் வழிகாட்டி மதிப்பீட்டின்படி நிர்ணயிக்கப்படும்.
- நிலம் விண்ணப்பதாரரின் (மகளிர்) பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு 100% முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் விலக்கு அளிக்கப்படுகிறது.
- வாங்கப்படும் நிலத்தினை விண்ணப்பதாரர் 20 வருடங்களுக்கு விற்பனை செய்யக் கூடாது . எனவே நிலம் வாங்கியவுடன் மாவட்ட மேலாளர்கள் சார் பதிவாளரிடம் தெரிவித்து இந்நிலம் 20 வருடங்களுக்கு விற்பனை செய்யக் கூடாதவாறு வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும்.
- விண்ணப்பதாரரின் குடும்பத்தினர் கடந்த 5 ஆண்டுகளில் சொந்தமாக நிலம் வைத்திருந்து அதனை யார் பெயரிலும் மாற்றவோ அல்லது விற்கவோ செய்திருக்கக் கூடாது.
- விண்ணப்பதாரர் வசிக்கும் மாவட்டத்திற்குள் அல்லது மாவட்ட எல்லையில் இருந்து 25 கீ.மீ சுற்றளவில் எந்த பகுதியில் நிலம் இருந்தாலும் (பிற மாவட்டமாக இருந்தாலும்) விண்ணப்பிக்கலாம்.

<u>விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை</u>:–

மாவட்ட அளவில் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும் :–

| மாவட்ட ஆட்சியர் | தலைவர் | மேற்படி குழு |
|---|---|---|
| மாவட்ட வருவாய் அலுவலர் | உறுப்பினர் | நில உடைமை ஆவணங்கள், ஒப்பந்தம் மற்றும் அமைவிடம் சேர பாதையுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். விவசாயத்திற்கு ஏற்றதா என்பதை கவனிக்க வேண்டும். நில ஒப்பந்தத்திற்கான உண்மைத் தன்மையினைக் கண்டறிய வேண்டும் வில்லங்கம் தொடர்புடைய ஆவணங்களை சரிபார்க்க வேண்டும். |
| வேளாண் இணை இயக்குநர் | உறுப்பினர் | |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | செயலர் / உறுப்பினர் | |
| மேலாளர், மாவட்ட முதன்மை வங்கி | உறுப்பினர் | |
| இணை இயக்குநர் ( கூட்டுறவு) | உறுப்பினர் | |
| சார்பதிவாளர் அல்லது அவரது பிரதிநிதி | உறுப்பினர் | |

<u>சொத்து உருவாக்கத்தை உறுதி செய்தல்:–</u>

தாட்கோ மாவட்ட மேலாளர், மானியத் தொகை விடுவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள், விண்ணப்பதாரர் பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டதை சம்மந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலக ஆவணங்களில் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யவேண்டும். மேலும் சொத்து உருவாக்கத்தின் ஆவணம் மற்றும் சான்றிதழ்களோடு கணினியில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

## 2. <u>நிலம் மேம்பாட்டு திட்டம்:–</u>

<u>நோக்கம் </u>:–

ஆதிதிராவிட மக்களின் நிலங்களை விவசாயத்திற்கு ஏற்புடையதாக மாற்றுவதற்கு தேவையான நில மேம்பாட்டு ஆதாரங்களை உறுதி செய்வதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் நிலவளத்தை மேம்படுத்துதல், பம்ப் செட் அமைத்தல், சொட்டு நீர் பாசனம் மற்றும் சுழல்முறை நீர்ப்பாசனம் அமைத்தல் போன்றவற்றிற்கு மானியம் விடுவிக்கப்படும்.

**தகுதி :—**

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவராக (மகளிர் மற்றும் ஆடவர்களாக) இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள நில உடைமை 2.5 ஏக்கர் நஞ்சை அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலத்திற்குள் இருக்கலாம்.
- 18—55 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்கவேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

**நிபந்தனைகள்:—**

இத்திட்டத்தின் கீழ் நிலம் மேம்பாடு செய்யும் போது கீழ்கண்ட நிபந்தனைகளைக் கடைபிடிக்க வேண்டும்:-

- நிலம் மேம்பாடு செய்வதற்கு நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- மூன்று ஆண்டுகளுக்கான அடங்கல் / 10 ஆண்டுகளுக்கான வில்லங்க சான்று வைத்திருக்க வேண்டும்.
- நிலத்திற்கான பட்டா மற்றும் சிட்டா வைத்திருக்க வேண்டும்.
- புலப்பட நகல் (FMB Sketch) மற்றும் 'அ'பதிவேடு ('A' Register) நகல் வைத்திருக்க வேண்டும்.
- திட்ட அறிக்கை வைத்திருக்க வேண்டும். (மண் வளத்தன்மை மேம்படுத்த வேளாண் நீர் ஆதாரம் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்)
- நிலம் மேம்பாடு செய்வதற்கு அந்தந்த மாவட்டங்களில் நபார்டு (NABARD) வழி காட்டுதலின்படி நிலவளம் மேம்படுத்துதல், பம்ப் செட் அமைத்தல் / சொட்டு நீர்ப்பாசனம் / சுழல்முறை நீர்ப்பாசனம் அமைத்தல் ஆகியவற்றிற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
- விண்ணப்பதாரரின் நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்பதற்கான புவியியல் வல்லுநரின் (Geologist) சான்று பெறப்படவேண்டும்.
- அனைத்து இனங்களிலும் நபார்டு (NABARD) வழிகாட்டுதல் முறை பின்பற்றப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள நில உடைமை 2.5 ஏக்கர் நஞ்சை அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலத்திற்குள் இருக்கலாம்.

**<u>விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை:–</u>**

மாவட்ட அளவில் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்:-

| | | |
|---|---|---|
| மாவட்ட ஆட்சியர் | : | தலைவர் |
| மாவட்ட வருவாய் அலுவலர் | : | உறுப்பினர் |
| வேளாண் இணை இயக்குநர் | : | உறுப்பினர் |
| நபார்டு வங்கி அலுவலர் | : | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | : | செயலர் / உறுப்பினர் |
| மேலாளர், மாவட்ட முதன்மை வங்கி | : | உறுப்பினர் |
| செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியாளர்) | : | உறுப்பினர் |

## 3. <u>தொழில் முனைவோர் திட்டம்:–</u>

### அ. <u>பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைத்தல்:–</u>

**<u>நோக்கம் :–</u>**

பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கு எண்ணெய் நிறுவனங்கள் செய்தித்தாள்களில் விண்ணப்பங்கள் வரவேற்கும் போது இந்நிலையங்கள் அமைக்க ஆதிதிராவிடர்கள் விண்ணப்பிக்கலாம். ஆதிதிராவிட விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவிலும் கலந்து கொள்ளலாம். விண்ணப்பதாரர்களை தகுதிபடுத்திட தாட்கோ நிதியுதவி அளிக்கும். எண்ணெய் நிறுவனங்கள் முகவர்களை தெரிவு செய்ய கீழ்கண்ட வழிகாட்டு நெறிகளை பின்பற்றுகிறது :-

- நிலம் வாங்குவதற்காகவும் (சொந்தமாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு முகவர் தேர்வில் 100க்கு 35 மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது)

- வங்கி உத்திரவாதம் வாங்குவதற்கான குறைந்தபட்ச முன்வைப்புத் தொகை வங்கி கணக்கில் வைக்கவும் (தேர்வில் 25 மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது)

- விற்பனை நிலையம் அமைப்பதற்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்கவும் இந்நிலையங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்கும் தாட்கோ நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தக் கூடிய திட்டமாகும்.

**<u>தகுதிகள் :–</u>**

- விண்ணப்பதாரர் குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தொழில் சார்ந்த (Professional) கல்வி பயின்றவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- விண்ணப்பதாரர் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலைய முகவர்களின் நியமனத்திற்கு உரிய தகுதியைப் பெற்றிருக்கவேண்டும்.

**<u>நிபந்தனைகள் :–</u>**

- பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலைய முகவர்களின் நியமனத்திற்கு விண்ணபத்திருக்க வேண்டும்.
- பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலையத்திற்காக வாங்க உத்தேசித்துள்ள நிலத்தினை விண்ணபப்பதாரரே தெரிவு செய்யவேண்டும்.
- நிலம் விண்ணபப்பதாரரின் பெயரில் பதிவு செய்யப்படவேண்டும்.
- நிலத்தினை விண்ணபப்பதாரர் 20 வருடங்களுக்கு விற்பனை செய்யக்கூடாது.
- விண்ணபப்பதாரர் பெயரில் வணிகப் பயன்பாட்டிற்கான நிலங்கள் ஏதும் அம்மாவட்டத்தில் இருக்கக்கூடாது.
- இத்திட்டத்தின் கீழ் அமைக்க உத்தேசித்துள்ள அடிப்படை கட்டமைப்புகள் எண்ணெய் நிறுவனத்தின் விதி / தேவைக்குட்பட்டு விண்ணப்பதாரரே முடிவு செய்து கொள்ளவேண்டும்.
- கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கும் எண்ணெய் நிறுவனத்தின் நேர்முகத் தேர்விற்கான மற்றும் தெரிவு செய்வதற்கான அழைப்பாணை கடிதம் பெற்றிருக்கவேண்டும்.

**<u>விண்ணபப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை :–</u>**

மாவட்ட அளவில் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும் :-

| | | |
|---|---|---|
| மாவட்ட ஆட்சியர் | : | தலைவர் |
| தாட்கோ மேலாண்மை இயக்குநரால் முன்மொழியப்படும் தலைமையக அலுவலர் | : | உறுப்பினர் |
| மாவட்ட வருவாய் அலுவலர் | : | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | : | உறுப்பினர் |
| மேலாளர், மாவட்ட முதன்மை வங்கி | : | உறுப்பினர் |
| மாவட்ட வழங்கல் அலுவலர் | : | உறுப்பினர் |
| எண்ணெய் நிறுவனத்தின் பிரதிநிதி | : | உறுப்பினர் |

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணபங்கள் தாட்கோ மான்யத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

## ஆ. <u>தொழில் முனைவோர் திட்டங்கள்</u>:–

**<u>நோக்கம் :</u>–**

அரசானது வறுமை ஒழிப்பினை மட்டும் அல்லாமல் ஆதிதிராவிட மக்களை தொழிலாளர் நிலையில் இருந்து தொழில் முனைவோராக உயர்த்தும் நோக்கில் பல்வேறு வருவாய் ஈட்டும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஆதிதிராவிடர்கள் தங்களுக்கு தெரிந்த, விருப்பமான, முன்அனுபவம் உள்ள தொழில் புரிந்து வருவாய் ஈட்டி பயன்பெறும் நோக்கில் தொழில் முனைவோர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>தகுதி :</u>–**

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்களின் கூட்டாண்மை நிறுவனமாகவும் இருக்கலாம்.
- 18– 55 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- கடன் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

**<u>நிபந்தனைகள் :</u>–**

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்கண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

- துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலே தொழில் புரிய வேண்டும்.
- கால்நடை வளர்ப்பு / பால்பண்ணை திட்டங்களுக்கு ஆவின் போன்ற நிறுவனங்களுடன் கட்டாயமாக ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

<u>விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை</u>:–

வட்டார அளவில் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

| | | |
|---|---|---|
| மாவட்ட மேலாளர், தாட்கோ | : | தலைவர் |
| மேலாளர், மாவட்ட முதன்மை வங்கி | : | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | : | உறுப்பினர் |
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>(ஆதிதிராவிடர் நலம்) | : | உறுப்பினர் |
| கூட்டார நிலையிலான அலுவலர், கால் நடை<br>வளர்ப்புத் துறை | : | உறுப்பினர் |
| கூட்டார நிலையிலான அலுவலர், தோட்டக்கலைத் துறை | : | உறுப்பினர் |
| சேவைப் பகுதி வங்கியாளர்கள் | : | உறுப்பினர் |
| ஆவின் அதிகாரி / கூட்டுறவுச்  சங்க அலுவலர் | : | உறுப்பினர் |

:

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மான்யத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி சொத்து உருவாக்குவதற்கான தொகையினை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு தொழில் புரியத் தேவையான பொருட்கள் / வாகனங்கள் வாங்குவதற்காக வினியோக நிறுவனத்திற்கு நிதியினை நேரடியாக விடுவிப்பார்.

<u>சொத்து உருவாக்கத்தை உறுதி செய்தல்</u>:–

தாட்கோ மாவட்ட மேலாளர், மானிய தொகை விடுவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள், கடன் வழங்கப்பட்ட இனங்களுக்கு சொத்து உருவாக்கப்பட்டுள்ளதை  நேரில் தல ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும்.

## 4. அ. <u>இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்</u>

<u>நோக்கம்</u>:–

படித்த, வேலையற்ற 18 முதல் 35 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் தங்களுக்கு தெரிந்த, விருப்பமான தொழிலினை மேற்கொள்ளும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.  இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தக் கூடிய திட்டமாகும். இத்திட்டத்தில் பயனாளிகளின் எண்ணிக்கையில் 25 சதவீதம் தாட்கோ மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

<u>தகுதி :–</u>

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- 18 – 35 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- தாட்கோ, மாநில அல்லது மத்திய அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களின் தகுதிச் சான்று பெற்றிருக்க வேண்டும்.

## 4. ஆ. <u>மருத்துவமனை, மருந்துக்கடை, கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல்</u>

<u>தகுதி :–</u>

- கிளினிக் (Clinic) அமைப்பதற்கு குறைந்தபட்சம் எம்.பி.பி.எஸ் (M.B.B.S), பி.டி.எஸ் (B.D.S) மற்றும் சித்தா (B.S.M.S.) ஆகியவற்றில் ஏதாவது ஒரு பிரிவில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
- முடநீக்கு மையம் (Physiotheraphy Centre) / மருந்தகம் அமைப்பதற்கு உரிய முடநீக்கவியல் பட்டப்படிப்பு (Physiotheraphy) மற்றும் மருந்தாளுனர் (D Pharm / B Pharm) படிப்பும் படித்து உரிய கவுன்சிலில் (Council) பதிவு செய்திருக்க வேண்டும்.
- கண்ணாடியகம் (Opticals), இரத்தப் பரிசோதனை நிலையம் (Lab Technician / Para Medical Centre) அமைப்பதற்கு சம்மந்தப்பட்ட பட்டய / பட்டப் படிப்பு முடித்த சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.
- இந்திய மருத்துவ கழகம் (மெடிக்கல் கவுன்சில்) / தொடர்புடைய நிறுவனத்தில் (Competent Authority) பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

**நிபந்தனைகள்:—**

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்கண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் :—

- துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலேயே தொழில் புரிய வேண்டும்.

**விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை:—**

வட்டார அளவில் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

| | | |
|---|---|---|
| மாவட்ட மேலாளர், தாட்கோ | : | தலைவர் |
| மேலாளர், மாவட்ட முதன்மை வங்கி | : | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | : | உறுப்பினர் |
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஆதிதிராவிடர் நலம் ) | : | உறுப்பினர் |
| சேவைப்பகுதி வங்கியாளர்கள் | : | உறுப்பினர் |
| இணை இயக்குநர் (மருத்துவம்) | : | உறுப்பினர் |

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மான்யத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

## 5. மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி

**நோக்கம்:—**

இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட மகளிர் சுய உதவிக் குழுக்கள் முறையாக இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு கடன் பெற தகுதி பெறுகின்றார்கள். சுய உதவி குழுக்கள் திறம்பட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**தகுதி:—**

- 12 முதல் 15 நபர்கள் அடங்கிய ஆதிதிராவிடர் இனப் பெண்களை மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுவாக இருக்க வேண்டும்.
- குழு இரண்டு முறை தர நிர்ணயம் செய்யப் பட்டிருக்க வேண்டும்.

- குழு உறுப்பினர்கள் 18–60 வயது வரை உடையவராக இருக்கலாம்.
- குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- குழு ஊக்குனரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சம் வரை இருக்கலாம்.
- இதுவரை எந்த ஒரு அரசு மானியமும் பெறாத குழுவாக இருத்தல் வேண்டும்.
- சுழல்நிதி பெற்ற குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

<u>விண்ணப்பிக்கும் முறை</u>:–

சுய உதவிக் குழுக்கள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் போது கீழ்க்கண்ட ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

- விலைப்புள்ளி டின் எண்ணுடன் (Quotation with TIN No.)
- குழு தீர்மான நகல்
- கடன் கோரும் தொழிலுக்கான திட்ட அறிக்கை
- குழு இரண்டு முறை தரம் பிரிக்கப்பட்டதற்கான சான்று
- வங்கிக் கணக்குப் புத்தக நகல்
- குழு ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களின் புகைப்படம்

<u>விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை</u>:–

வட்டார அளவில் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்:-

<table>
<tr><td>திட்ட அலுவலர், மகளிர் திட்டம் /<br>திட்ட அலுவலர், புதுவாழ்வு</td><td>தலைவர்</td><td rowspan="5">இக்குழு பயனாளிகளின் சாதிச் சான்றிதழை சரிபார்க்க வேண்டும்<br>குழு தேர்ந்தெடுத்த பொருளாதார திட்டத்தினை பரிசீலனை செய்ய வேண்டும்.</td></tr>
<tr><td>வருவாய் கோட்ட அலுவலர் /<br>வட்டாட்சியர்</td><td>உறுப்பினர்</td></tr>
<tr><td>மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்</td><td>உறுப்பினர்</td></tr>
<tr><td>சம்மந்தப்பட்ட வங்கி மேலாளர்கள்</td><td>உறுப்பினர்</td></tr>
<tr><td>மாவட்ட மேலாளர், தாட்கோ</td><td>உறுப்பினர்</td></tr>
</table>

மேலும், குழு மேற்கொள்ளும் பொருளாதார தொழில்களுக்கேற்ப துறை சம்மந்தப்பட்ட அலுவலரும் குழுவில் உறுப்பினராக இருக்க வேண்டும்.

- தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மான்யத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

## 6. மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான சுழல் நிதி திட்டம்:–

**நோக்கம்:–**

ஆதிதிராவிடப் பெண்கள் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுக்களுக்கு வறுமை ஒழிப்பு நோக்கோடு உள்கடன் அளித்திட சுழல் நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தக்கூடிய திட்டமாகும்.

**தகுதி:–**

- 12 முதல் 15 நபர்கள் அடங்கிய ஆதிதிராவிடர் இனப்பெண்கள் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுவாக இருக்க வேண்டும்.
- குழு ஆரம்பித்து 6 மாதங்கள் முடித்து முதல் முறையாக தர நிர்ணயம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- குழு உறுப்பினர்கள் 18 –60 வயது உடையவராக இருக்கலாம்.
- குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1 .00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- குழு ஊக்குனரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சம் வரை இருக்கலாம்.
- சுய உதவிக் குழு வேறு எந்த அரசு திட்டத்திலும் சுழல் நிதி கடனுக்கான மானியம் பெற்றிருக்கக் கூடாது.
- குழு ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களின் புகைப்படம்
- குழு தீர்மானம்

<u>**விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை:–**</u>

வட்டார அளவில் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்:-

<table>
<tr><td>திட்ட அலுவலர், மகளிர் திட்டம் / திட்ட அலுவலர், புதுவாழ்வு</td><td>தலைவர்</td><td rowspan="5">இக்குழு, பயனாளிகளின் சாதிச் சான்றிதழ் சரிபார்க்க வேண்டும். வங்கிக் கடன் மற்றும் குழு உறுப்பினர்களுக்கு அறிவுரைகள் வழங்க வேண்டும்.</td></tr>
<tr><td>வருவாய் கோட்ட அலுவலர் / வட்டாட்சியர்</td><td>உறுப்பினர்</td></tr>
<tr><td>மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்</td><td>உறுப்பினர்</td></tr>
<tr><td>சம்மந்தப்பட்ட வங்கி மேலாளர்கள்</td><td>உறுப்பினர்</td></tr>
<tr><td>மாவட்ட மேலாளர், தாட்கோ</td><td>உறுப்பினர்</td></tr>
</table>

<u>**சுழல் நிதிக்கான மானியம் விடுவிக்கும் முறை :–**</u>

குழு தொடங்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு பிறகு தரம் பிரித்தல் செய்யப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றிருப்பின் வங்கியில் சுழல் நிதி பெறுவதற்காக தாட்கோ மானியம் ரூ.25000/– வங்கிக்கு விடுவிக்கப்படும்.

## 7. <u>மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி திட்டம்</u>

<u>**நோக்கம்**</u>**:-**

தாட்கோ திட்டங்கள் எதிலும் உடனடியாக பயன்பெற இயலாதவர்களுக்கு விரைவில் சுயதொழில் புரிந்து பயன் பெறும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற இயலாத இனங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் உதவி பெற தகுதியுடையவர் அல்லது மிக அவசியம் என்று அவர் முடிவு செய்யும் இனங்களுக்கு ரூ.20,000/– நிதியுதவி வழங்கப்படும். ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள், 40 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகளுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

<u>**தகுதி**</u>**:–**

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் தான் வறிய நிலையிலுள்ளார் என்பதற்கான உறுதி வாக்கு மூலம். (Self affidavit)
- வயது வரம்பு – ஏதுமில்லை

**<u>விண்ணப்பிக்கும் முறை</u>:—**

மாவட்ட ஆட்சியரிடம் இத்திட்டத்தில் பயன்பெற நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

**<u>விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை</u>:—**

இத்திட்டத்திற்கான பயனாளிகள் மாவட்ட ஆட்சியரால் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரருக்கு மானியம் விடுவிக்கப்படும்.

**<u>நிவாரணத் தொகை</u> :—**

விண்ணப்பதாரர் அளித்துள்ள விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு நிவாரணத்தொகை கோடிட்ட காசோலையாக வழங்கப்படும்.

**<u>சொத்து உருவாக்கத்தை உறுதி செய்தல்</u>:—**

தாட்கோ மாவட்ட மேலாளர், மானியத் தொகை விடுவிக்கப்பட்டவுடன் விண்ணப்பதாரர்களின் சொத்து உருவாக்கத்தினை நேரில் தல ஆய்வு மேற்கொண்டு, சொத்து உருவாக்கத்தினை உறுதி செய்து கணினியில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

## 8. <u>மேலாண்மை இயக்குநர் விருப்புரிமைத் திட்டம்</u>

இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் இன விதவைகள், மாற்றுத் திறனாளிகள், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத குழந்தைகள், எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மகளிர் / ஆடவர், திருநங்கைகள், நலிந்த கலைஞர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் திறன் வளர்க்கும் பயிற்சிகள் அளித்தல், கல்வியினைத் தொடர்வதற்கு தேவைப்படும் கூடுதல் நிதியுதவி (Gap Filling), சாதிச்சண்டையினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கலாம். விண்ணப்பதாரர்களின் கோரிக்கைக்கு ஏற்றவாறு தாட்கோ மாவட்ட மேலாளரின் பரிந்துரையுடன் பயனாளிகளுக்கு நேரடியாக வங்கிக் காசோலை / வரைவோலை மூலம் நிதி விடுவிக்கப்படும். கல்வி தொடர்வதற்கு தேவைப்படும் கூடுதல் நிதிக்கு விண்ணப்பிப்போர் கல்லூரியில் இருந்து உண்மைத்தன்மை (Bonafide) சான்றிதழ் பெற்று விண்ணப்பிக்கலாம்.

## 9. <u>துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம்</u>

**<u>நோக்கம்</u>:-**

ஆதிதிராவிடர் இன விவசாயிகள் நிலங்களுக்கு இலவசமாக மின் இணைப்பு பெறுவதற்காக இத்திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

<u>நிபந்தனைகள்</u>: –

விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களோடு விண்ணப்பிக்க வேண்டும்:-

- சாதி சான்று.
- குடும்ப ஆண்டு வருமானச் சான்று .
- குடும்ப அட்டை எண் – நகல் / வட்டாட்சியர் கையொப்பமிடப்பட்ட இருப்பிடச் சான்று.
- மின்சார வாரியத்தில் பதிவு செய்த இரசீது எண்.
- காத்திருப்போர் பட்டியலுக்கான தகவல் சீட்டு
- விண்ணப்பித்திருக்கும் பயனாளிகளுக்கு நிலத்திற்குரிய பட்டா, சிட்டா இருக்க வேண்டும்.
- புறம்போக்கு இடம் மற்றும் கோயில் இடங்களுக்கு இணைப்புகள் வழங்கக் கூடாது.
- இத்திட்டத்தில் கூட்டு பட்டாவாக இருக்கும் நிலையில் தடையில்லா சான்றிதழ் மற்றும் அவருடைய அனுபோகத்தில் உள்ள பகுதிக்கான மூன்று வருட அடங்கல் வைத்திருந்தால் அவ்விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

<u>விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை</u>:–

மாவட்ட மேலாளர் அவர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் அனைத்தும் உள்ளனவா என சரிபார்த்து, தல ஆய்வு முடித்த பின்னர், இலவச மின் இணைப்பு பெற தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் மாவட்ட மேலாளர்களால் மேலாண்மை இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்படும்.

<u>நிதி விடுவிக்கும் முறை</u>:–

அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட பட்டியல் தொகுக்கப்பட்டு (Consolidate) நபருக்கு ரூ.10,000/– வீதம் சென்னையில் உள்ள மின்சார வாரிய தலைமையகத்திற்கு மொத்தத் தொகையினை மேலாண்மை இயக்குநர் விடுவிப்பார்.

<u>சொத்து உருவாக்கத்தை உறுதி செய்தல்</u>:–

விண்ணப்பதாரருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பதை மாவட்ட மேலாளர் மின்வாரியத்துடன் தொடர்பு கொண்டு உறுதி செய்து மேலாண்மை இயக்குநருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

## 10. இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

**நோக்கம்:-**

இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதும் ஆதிதிராவிடர் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதன்மைத் தேர்வு (Main Exam) எழுதுபவர்களுக்கு ரூ.50,000/– நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**தகுதி:–**

- ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- இந்திய குடிமைப் பணி முதனிலைத் (Preliminary) தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும்.
- இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு (Main) எழுதுவதற்காக விண்ணப்பம் செய்திருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மாநில, மத்திய அரசு, பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ஏதுமில்லை

**நிபந்தனைகள்:–**

1. விடுவிக்கப்படும் தொகையில் புத்தகங்கள் வாங்குதல், நகலிடுதல் (Xerox) மற்றும் பயிற்சி நிறுவன கட்டணங்கள் செலுத்துதல் போன்றவற்றிற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. பெறப்பட்ட தொகைக்கான அசல் ரசீதுகள் மற்றும் பயன்படுத்தப் பட்டதற்கான சான்று ஆகியவற்றை தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**தேர்வு செய்யும் முறை:–**

விண்ணப்பதாரர்களின் அசல் சான்றிதழ்கள் தாட்கோ தலைமை அலுவலகத்தில் ஆய்வு செய்யப்பட்டு தேர்வு செய்யப்படுவர்.

**நிதி விடுவிக்கும் முறை:–**

பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள இளைஞர்களுக்கு ரூ.50,000/– கோடிட்ட காசோலை நேரடியாக வழங்கப்படும்.

## 11. இளம் சட்டப் பட்டதாரிகளுக்கு தொழில் துவங்குவதற்கு நிதியுதவி

**நோக்கம்:–**

இளம் சட்டப்பட்டதாரிகள் தாங்கள் தொழில் துவங்குவதற்கு அலுவலக வாடகை முன்பணம், அறைகலன்களான மேசை, நாற்காலி, அலமாரி மற்றும் சட்டப் புத்தகங்கள் வாங்குவதற்காக ரூ.50,000/– நிதி வழங்கப்படுகிறது.

**தகுதி:-**

- ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- வயது வரம்பு 21–45–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- சட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- தமிழ்நாடு பார் கவுன்சிலில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ஏதுமில்லை

**விண்ணப்பிக்கும் முறை:–**

விண்ணப்பம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் வழங்கப்படும். பெறப்பட்ட விண்ணப்பங்களை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியனர் நல அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

**தேர்வு செய்யும் முறை:–**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியனர் நல அலுவலர் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஆதிதிராவிடர் நல ஆணையர் / இயக்குநரால் தாட்கோவிற்கு பரிந்துரை செய்யப்படும்.

**நிதி விடுவிக்கும் முறை:–**

ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் / இயக்குநரால் பரிந்துரை செய்யப்பட்ட மனுதாரருக்கு உரிய தொகை ஒருவருக்கு ரூ.50,000/– என்ற அடிப்படையில் ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் / இயக்குநருக்கு காசோலையாக தாட்கோவிலிருந்து விடுவிக்கப்படும். விடுவிக்கப்பட்ட தொகைக்கான பயனீட்டுச் சான்று ஆதிதிராவிடர் நல இயக்குநரால் தாட்கோவிற்கு அனுப்பி வைக்கப்படும்.

## 12. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி—1 முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி

**நோக்கம்**:-

தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி—1 முதனிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் ஆதிதிராவிடர் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ.50,000/— நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 2013-14-ம் நிதியாண்டில் இருந்து செயல்படுத்தப்படும்.

**தகுதி**:—

- ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-1 முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும்.
- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி—1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்காக விண்ணப்பம் செய்திருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மாநில, மத்திய அரசு, பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ஏதுமில்லை

**நிபந்தனைகள்**:—

1. விடுவிக்கப்படும் தொகையில் புத்தகங்கள் வாங்குதல், நகலிடுதல் (Xerox) மற்றும் பயிற்சி நிறுவன கட்டணங்கள் செலுத்துதல் போன்றவற்றிற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. பெறப்பட்ட தொகைக்கான அசல் ரசீதுகள் மற்றும் பயன்படுத்தப்பட்டதற்கான சான்று ஆகியவற்றை தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**தேர்வு செய்யும் முறை**:—

விண்ணப்பதாரர்களின் அசல் சான்றிதழ்கள் தாட்கோ தலைமை அலுவலகத்தில் ஆய்வு செய்யப்பட்டு தேர்வு செய்யப்படுவர்.

**நிதி விடுவிக்கும் முறை**:—

பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள இளைஞர்களுக்கு ரூ.50,000/— கோடிட்ட காசோலையாக நேரடியாக வழங்கப்படும்.

## 13. பட்டயக்கணக்கர் / செலவு கணக்கருக்கு நிதியுதவி

பட்டயக் கணக்கர்கள் / செலவு கணக்கர்கள் தாங்கள் தொழில் துவங்குவதற்கு அலுவலக வாடகை முன்பணம், அறைகலன்கள் மற்றும் துறை சார்ந்த புத்தகங்கள் வாங்குவதற்கு 2013–2014–ஆம் ஆண்டு முதல் ரூ.50,000/- நிதியுதவி வழங்கப்படும்.

<u>தகுதி</u> :-

- ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- வயது வரம்பு 25–45–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- பட்டயக் கணக்கர் / செலவு கணக்கராக தொழில் செய்வதற்கு இந்திய பட்டயக் கணக்கர் நிறுவனம் / செலவு கணக்கர் நிறுவனத்தில் உறுப்பினராக பதிவு செய்திருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ஏதுமில்லை.

<u>விண்ணப்பிக்கும் முறை</u> :–

தாட்கோ இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கும் போது சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் தொழில் செய்வதற்கான பதிவு சான்றிதழ் ஆகிய விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

<u>தேர்வு செய்யும் முறை</u> :–

இணையதளம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு சான்றிதழ்கள் நேரிடையாக ஆய்வு செய்து தெரிவு செய்யப்படும்.

<u>நிதி விடுவிக்கும் முறை</u>:–

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 50,000/-க்கான நிதி காசோலை / வரைவோலையாக விடுவிக்கப்படும்.

## 14. சமூக நலத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் மகளிர் தொழில் தையல் கூட்டுறவுச் சங்க உறுப்பினருக்கு சிறப்பு நிதியுதவி

மாணவர்களுக்கு அளிக்கப்படும் இலவச சீருடைகளை தைப்பதற்கு சமூக நலத்துறை கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் மகளிர் தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இம்மகளிர் தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள 8,202 ஆதிதிராவிடர் மற்றும் 204 அருந்ததியினர் மகளிர் உறுப்பினர் ஆக மொத்தம் 8406 மகளிர் பயன் பெறும் வகையில் உயர்தர தையல் இயந்திரங்கள் வாங்கிட திட்டத் தொகையில் 70 சதவிகிதம் தாட்கோ

மூலதனத்தில் இருந்து விளிம்புக்கடனாக 4 சதவிகித வட்டியில் ரூ. 8.83 கோடி வழங்கப்படும். மீதமுள்ள 30 சதவிகிதமான ரூ.3.77 கோடி தாட்கோ மூலம் மானியமாக வழங்கப்படும்.

## 15. மதிப்பாய்வு செய்தல்

தாட்கோ திட்டங்கள் சரிவர செயல்படுத்துவது குறித்து மதிப்பாய்வு செய்வது மிகவும் அவசியமாகும். இதனால் திட்டங்கள் தகுதியுடையவர்களுக்கு சென்று அடைவதையும், சொத்து உருவாக்கப்படுவதையும் உறுதி செய்வதோடு திட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும் கண்காணிக்க இயலும். எனவே, மதிப்பாய்வு செய்வதற்கான செலவினத் தொகை ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

## 16. திறன் மேம்பாட்டு பயிற்சி

சிறப்பு மத்திய நிதியுதவியில் இருந்து திறன் மேம்பாட்டு ஆரம்ப நிலை பயிற்சிகளான கட்டுமான தொழில் சார்ந்த பயிற்சிகள், இலகுரக வாகன ஓட்டுனர் பயிற்சி அளித்து ஓட்டுநர் உரிமம் பெற்றுத் தரலாம். மேலும் மைய அரசு நிறுவனங்கள் மூலம் ஆயத்த ஆடை தயாரித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல், கணினிப் பயிற்சிகள், தகவல் தொழில் நுட்பம் மற்றும் அவை சார்ந்த பயிற்சிகள் இவ்வாண்டில் வழங்கப்பட உள்ளது.

மேலும் ஆங்கில அறிவாற்றலை வளர்ப்பதற்கு தற்போது 9 மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும், இளங்கலை பட்டப்படிப்பில் இறுதியாண்டு பயின்று வரும் மாணவர்களுக்கும் இரண்டு மாத பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இக்குறுகிய காலப் பயிற்சினால் உரிய பலன் கிடைக்கவில்லை. எனவே இவ்வாண்டு 6,7,8,9 மற்றும் 11 வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு அவர்கள் கற்கும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் தினந்தோறும் ஒரு மணி நேரம் அப்பள்ளிகளில் உள்ள ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அல்லது தனியார் பள்ளிகளில் உள்ள சிறந்த ஆர்வமுள்ள ஆசியர்களைக் கொண்டு வருடத்திற்கு 8 மாதம் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அவ்வாறு பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கு மாதம் தோறும் ரூ.5000/- முதல் ரூ.7500/- வரை ஊக்கத் தொகையாக வழங்கப்பட உள்ளது.

5. 2013–2014–ஆம் ஆண்டில் 36126 ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் ரூ.352.96 கோடியில் (ரூபாய் முந்நூற்று ஐம்பத்து இரண்டு கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சம் மட்டும்) (ரூ.125.91 கோடி மானியம் + ரூ.227.05 கோடி பருவக் கடன்) செயல்படுத்தப்படவுள்ள பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைக் கொண்ட மாநில செயல் திட்டம் மற்றும் அவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2013–2014–ஆம் ஆண்டிற்கான சிறப்பு மத்திய நிதியுதவியில் 125.91 கோடி நிதியுதவியுடன் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கூறப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகளின் விதிமுறைகளுக்குட்பட்டு தாட்கோ மூலம் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது.

6. மேலும், மேலாண்மை இயக்குநர், தாட்கோ பயனாளிகளைத் தெரிவு செய்யும் போதும், திட்டங்களை செயல்படுத்தும்போதும், திட்டத்தின் பயன் அதிகபட்ச பயனாளிகளை சென்றடையும் வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். வங்கிகள் திட்டத்திற்கான கடனை வழங்கும்போது, திட்டத்திற்கான மானியத்தை தாட்கோ வழங்க வேண்டும்.

**7.** இச்செயல் திட்டத்தைச் செயல்படுத்தும் போது, தேவைக்கேற்ப ஒதுக்கீடுகளையும், பயனாளிகள் எண்ணிக்கையினையும் மாற்றி அமைத்துக் கொள்ள தாட்கோவின் மேலாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**8.** மேலே கூறப்பட்ட திட்டங்களின் நிதியுதவியும், பயன்களும் ஆதிதிராவிடர் இன மக்களுக்கு மட்டுமானதாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அல்லது வேறு ஏதேனும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் ஆதிதிராவிடர்கள் தாட்கோ மாநில செயல் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் பயனடைய தகுதியற்றவர் என்பதனை உறுதி செய்து கொள்ளுமாறு மேலாண்மை இயக்குநர், தாட்கோ அறிவுறுத்தப்படுகிறார்.

**9.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். **06**/DS (DS)/13, நாள்:09.07.**2013** –இல் வழங்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

**கண்ணகி பாக்கியநாதன்,**
**அரசு செயலாளர்**

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை– **101**
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–**5**
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை– **5**
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–**8**
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–**9/18**
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை–**1**) சென்னை–**35**
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –**6**
இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–**6**
இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, சென்னை–**6**
இயக்குநர், சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை, புதுடெல்லி –**1**
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

<u>நகல்:–</u>
இயக்குநர், தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையம், சாஸ்த்திபவன் சென்னை–**6**
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–**9**
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–**9**
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–**9**
அனைத்து தாட்கோ மாவட்ட மேலாளர்கள் (மேலாண்மை இயக்குநர்) தாட்கோ வழியாக)
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (அனைத்து பிரிவுகள்), சென்னை–**9**
நிதித்துறை, சென்னை–**9**
இருப்புக் கோப்பு / உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//